விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 046 வள்ளுவர் ஆண்டு 2054 தை 20 வெள்ளிக்கிழமை (03.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பொருளாதாரப் போரில் வெற்றி பெற முடியும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கண்டி)

போரினால் இழந்த உயிர்களை மீட்டெடுக்க முடியாவிட்டாலும், பொருளாதாரப் போரில் இழந்த வருமானத்தை மீட்டெடுக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 11

### சுதந்திர தினம் தமிழர்களுக்கு கரிநாள்

## பெப் 4 தமிழர் தாயகத்தில் ஹர்த்தாலுக்கு அழைப்பு

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்




(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நாளை 4ஆம் திகதி ஹர்த்தாலுக்கு யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (03ஆம் பக்கம் பார்க்க)

### எந்தவொரு சந்தர்ப்பத்திலும்

# 13வது திருத்தத்தை அமுலாக்கக்கூடாது

### பௌத்த மகா பீடங்கள் ரணிலிடம் நேரடியாக வலியுறுத்து



(கண்டி)

நாட்டின் இறையாண்மைக்கும் சுயாதீனத்தன்மைக்கும் தேசியப் பாதுகாப்புக்கும் பாரதூரமான அச்சுறுத்தலாக அமையும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முழுமையாக நடைமுறைப்படுத்தக்கூடாது என்று நான்கு பௌத்த மகா பீடங்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாக வலியுறுத்தியுள்ளன. (11ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.மாவட்டத்தில்

## 118.5 மி.மீற்றர் மழைவீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 118.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் 11

### லிட்ரோ சமையல்

## எரிவாயு விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 350 முதல் 400 ரூபாய் வரை அதிகரிக்கப் படவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை அல்லது அன்றைய தினம் நள்ளிரவு முதல் இந்த 11

### வலி.வடக்கில் படையினர் வசமிருந்த

## சுமார் 109 ஏக்கர் காணி இன்று உரிமையாளர்களிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதியில் பாதுகாப்பு படையினர் கைவசமிருந்த சுமார் 109 ஏக்கர் காணி இன்று உரிமையாளர்களிடம் கையளிக்கப் படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்படவுள்ள காணிகள் 197 குடும்பங்களுக்கு இன்று பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் 11

### மக்களுக்கு சேவையாற்ற

## ஜனாதிபதியாக இருக்க வேண்டிய அவசியமில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(மட்டக்களப்பு)

நாட்டு மக்களுக்கு சேவை யாற்றுவதற்கு ஜனாதிபதியாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ 11

## நாட்டைக் கட்டியெழுப்ப மாற்றத்தை உருவாக்குவோம்

### ஜே.வி.பி தலைவர் அநுர



(அம்பாறை)

தேர்தல் காலத்தில் அரிசி, பணம் கொடுக்கும் வகையில் அரசியல் நாம் செய்யவில்லை.

நாம் நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய மாற்றத்தை உருவாக்கக்கூடிய வகை 11

## செலவைக் குறைக்கும் சுற்றறிக்கையால் தேர்தலுக்கு இடையூறு ஏற்படாது

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

மீண்டெழும் செலவுகளை 6 வீதத்தால் குறைத்து வெளியிடப்பட்டுள்ள புதிய சுற்றறிக்கையினால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு இடையூறு ஏற்படாது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கான செலவை குறைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா கூறினார்.

ஏதேனுமொரு வகையில் திறைசேரி 11

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி
## ஆனையிறவு கடைத்தொகுதியிலுள்ள கடைகளிற்கான வைப்புப்பண கேள்வி அறிவித்தல் - 2023

கரைச்சி பிரதேச சபையின் முரசுமோட்டையின் உப அலுவலக எல்லைக்குட்பட்ட நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்களிடமிருந்து ஆனையிறவு வணிக சுற்றுலா மைய கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான திறப்புப்பண கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி | : 03.02.2023தொடக்கம் 16.02.2023 ஆம் திகதிவரை (அலுவலக நாட்களில் மு.ப 9.00 - பி.ப01.00 வரை) |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி | : 17.02.2023 வெள்ளிக்கிழமை பி.ப 2.00மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி | : 17.02.2023 வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் | : கரைச்சி பிரதேசசபை, தலைமை அலுவலகம், |

### ஆனையிறவு கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல | விபரம் | வியாபாரத்தின் தன்மை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 01 | கருவாட்டுக் கடை | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 02 | கடை இல 02 | உள்ளூர் உற்பத்தி ( உலர் உணவு) | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 03 | கடை இல 03 | உள்ளூர் உற்பத்தி ( உலர் உணவு) | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 04 | கடை இல 05 | பனைசார் உற்பத்தி பொருட்கள் | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 05 | கடை இல 06 | பழக்கடை | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |

**நிபந்தனைகள் :**

1. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை தவிசாளர் / செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 17.02.2023 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 17.02.2023 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

02. கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் கரைச்சி பிரதேசசபையின் முரசுமோட்டை உப அலுவலக எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராமசேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப்பிரதியுடன் நேரடியாக கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சிக்கு சமூகமளித்தல் வேண்டும்.

03. கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம், மீளளிக்கப்படக்கூடிய கேள்வி வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.

05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

06. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளர் / செயலாளரிற்கு பூரண அதிகாரமுண்டு.

08. சித்திகரக் குத்தகைதாரர் வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையையும் பாதுகாப்பு வைப்புப்பணமாக மூன்றுமாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாகவும் செலுத்துதல் வேண்டும்.

09. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம் :- மகன், மகள்).

10. சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடி யாது.

11. நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

12. சித்திகர கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத் திற்குள் அல்லது சபையால் வழங்கப் பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத் தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

13. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் செலுத்தப் பட வேண்டும் என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.

14. இவ் ஒப்பந்தம் தொடர்பாக சபையின் தவிசாளர் / செயலாளரின் எவ் வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ / செயலாளரிற்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.

15. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை கரைச்சி பிரதேச சபையின் உப அலுவலகம் முரசுமோட்டையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**அருணாசலம் வேழமாலிகிதன்**
**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**

(C-5891)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை ஜனவரி மாதம் அதிகரிப்பு

(கொழும்பு)

2023 ஜனவரியில் 100,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகியுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 102,545 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

ஜனவரி 2022 இல் பதிவாகிய 82,327 சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் 20,218 சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகை தந்துள்ளனர்.

இந்த காலகட்டத்தில் ரஷ்யாவிலிருந்து 25,254 சுற்றுலாப் பயணிகளும், இந்தியாவிலிருந்து 13,759 பேரும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 8,483 பேரும் வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)


**கிழவன்காடு கலாமன்றம்**
**யாழ்கிளை**
**கலை வகுப்புகளுக்கான அனுமதியும் நாள் வகுப்பும் (தைப்பூச நாள்)**




எதிர்வரும் 05.02.2023 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணிக்கு (தைப்பூச நாள்) கலை வகுப்புகளுக்கான அனுமதியும் நாள் வகுப்பும் நடைபெறும்.

**நடைபெறும் கலை வகுப்புகள்**



- அறநெறி
- பண்ணிசை
- சங்கீதம்
- நடனம்
- மிருதங்கம்
- வயலின்
- வீணை
- ஓகன்
- சித்திரம்
- மாலை கட்டுதல்
- கோலம் போடுதல்
- தோரணம் பின்னுதல்

பதிவாளர்
**கிழவன்காடு கலாமன்றம்**
**யாழ்கிளை**
**இல.428, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்**
**[வண்ணை சிவன் கோவில் அருகாமை]**
தொடர்பு : 077 578 6638

(C-5893)



**அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்**
**தைப்பூச உலகப் பெருமஞ்சத் திருவிழா**




காலம் : 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து பால்குடப் பவனி ஆரம்பம்.
காலை 9.30 மணிக்கு மாபெரும் பொங்கல் ஆரம்பித்து 2.30 மணி வரை நடைபெறும்.
இரவு 6 மணிக்கு உலகப் பெரு மஞ்சத்தில் முருகப் பெருமான் வீதி வலம்வரும் நிகழ்வும் தமிழரின் பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும்.

பால்குடம் எடுக்க விரும்பும் அடியவர்கள் முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொலைவிலிருந்து வரும் அடியவர்கள் வசதி கருதி பொங்கல் பொருட்கள் அனைத்தும் ஆலயமுன்றலில் பெற்றுக்கொள்ளலாம்.

முருகன் அடியவர்கள் உலகப் பெருமஞ்ச வடம் தொட்டிழுக்க வாரீர்...

விளம்பர அனுசரணை

**SriRam Gym**
**ஸ்ரீ ராம் ஜிம்**
K.K.S வீதி, இணுவில்,
மருதனார்மடம்.



**கணேசன் ஸ்ரோர்ஸ்**
K.K.S வீதி, இணுவில் சந்தி.
**021 224 1957**


(C-5890)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனாவில் குருதித் தட்டுப்பாடு; குருதிக் கொடையாளர்களுக்கு அழைப்பு

**(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் அனைத்து குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக யாழ். போதனா மருத்துவமனை தெரிவித்துள்ளது.**

எனவே ஏற்கனவே குருதிக்கொடை வழங்கி நான்கு மாதங்கள் பூர்த்தியான குருதிக் கொடையாளர்களும் புதிய குருதிக் கொடையாளர்களும் யாழ்.போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் இது தொடர்பிலான மேலதிக தகவல்களுக்கு 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் இரத்த வங்கிப் பிரிவினர் கேட்டுக் கொள்கின்றனர். (நி-33)



## சுதந்திர தினத்தன்று மதுபானசாலைகளை மூடத் தீர்மானம்




(கொழும்பு) நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபானசாலைகளையும் நாளை 4 ஆம் திகதி மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

75 ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்திற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# ரணிலை விரட்டுவோம் ஜே.வி.பி சபதம்



(கொழும்பு) மார்ச் 10 ஆம் திகதி ஆகும் போது ரணில் விக்கிரமசிங்கவால் ஜனாதிபதி கதிரையில் அமர முடியாது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் ஊடாக அதை நாம் நிரூபித்துக் காட்டுவோம் என ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துக் கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது கட்சியின் வெற்றியின் ஊடாக மக்கள் ஆணை புரட்சி ஒன்றை ஏற்படுத்துவோம். அந்த மக்கள் ஆணையின் ஊடாக ரணிலின் ஜனாதிபதி கதிரையைப் பறிப்போம்.

தேர்தல் நடத்துவதற்குப் பணம் இல்லை என்றால் அரசு ஆட்சியில் இருந்து விலக வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் விரும்பும் ஆட்சியை அமைப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

இன்று அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் பொது எதிரியாக மாறி இருப்பது ஜே.வி.பி தான். அதற்குக் காரணம் ஜே.வி.பி வெற்றியை நோக்கி நகர்வது தான். நான் கொழும்பு மாநகர சபையின் உறுப்பினராக இருந்திருக்கின்றேன்.

அதனால் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகம் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அடிமட்டத்தில் இருந்து பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு உள்ளூராட்சி சபைதான் ஒரே வழி.

பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்றால் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டும். அதற்கான முதலாவது வாய்ப்புதான் உள்ளூராட்சி சபைத் தேர்தல். இதை மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

இந்தத் தேர்தலில் நல்லவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும். இந்தத் தேர்தல் கட்சிகளின் தேவையை விட மக்களின் தேவைக்காக வருகின்ற தேர்தல்" என அவர் தெரிவித்தார். (நி)

# இலங்கையில் 56 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிப்பு

## யுனிசெப் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு) இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக மனிதாபிமான உதவி தேவைப்படுவோரின் எண்ணிக்கை 70 இலட்சம் பேர் என மதிப்பிடப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர்களுக்கான அமைப்பான யுனிசெப் அறிவித்துள்ளது.

சிறுவர்களுக்கான சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி போன்றவை அத்தியாவசிய சேவைகள். மருந்து பற்றாக்குறை, உணவுப் பற்றாக்குறை, எரிபொருள் பற்றாக்குறை மற்றும் நீண்ட மின்வெட்டு ஆகியவற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் 23 இலட்சம் சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது.

5 வயதுக்கு உட்பட்ட கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு உள்ள 56,000 குழந்தைகளுக்கு அவசர உதவிகள் தேவைப்படுகின்றன.

அத்துடன் 4.8 மில்லியன் சிறுவர்களுக்கு தடையில்லா கல்வி கிடைக்க வேண்டும்என்று ஐக்கிய நாடுகளின் சிறுவர் அமைப்பான யுனிசெப் தெரிவித்துள்ளது. (நி)

# புற்றுநோய் மருந்துகள் கிடைக்க காலதாமதமாகும்-சுகாதார மேம்பாட்டு செயலணி

(கொழும்பு) புற்று நோய் மருந்து வகைகளை பெற்றுக் கொள்வதில் நெருக்கடி நிலை உருவாகியுள்ளதாக சுகாதார மேம்பாட்டு செயலணி தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து புற்று நோய்க்கான மருந்து வகைகள் கிடைக்கவிருந்த போதிலும், தற்பொழுது அது ஆறு மாதங்கள் காலதாமதமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொள்முதல் தொடர்பிலான நடவடிக்கைகளில் ஏற்பட்ட கால தாமதமே இவ்வாறு மருந்து வகைகள் கிடைக்கப் பெற கால தாமதமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புற்று நோய்க்கான மருந்துப் பொருட்கள் மட்டுமன்றி ஏனைய நோய்க்கான மருந்துப் பொருட்களிலும் தட்டுப்பாட்டு நிலைமை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# எரிபொருள் விலை அதிகரிப்பு முச்சக்கரவண்டி கட்டணத்தில் மாற்றமில்லை

(கொழும்பு) பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் முச்சக்கரவண்டி கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வதில்லை என்ற தீர்மானத்தை எடுத்துள்ளதாக அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு அந்த சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

சமீபத்தில் மூன்று முறை பெற்றோல் விலை குறைக்கப்பட்டது. எனினும் முச்சக்கர வண்டி கட்டணம் குறைக்கப்படவில்லை.

எனவே, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ஒக்டென் 92 பெற்றோல் லீற்றரொன்றின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்ட போதிலும், கட்டணத்தில் எந்த திருத்தமும் செய்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

எனவே, அரசாங்கம் எரிபொருள் விலையை அதிகரிப்பதைப் போன்று எரிபொருள் ஒதுக்கீட்டையும் அதிகரிக்குமாறும் எரிபொருள் அனுமதிப்பத்திர முறையில் அதனையும் உள்ளடக்குமாறும் முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம், அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது. (நி)

# பெப்ரவரி 4 ஆம் திகதி ஹர்த்தாலுக்கு யாழ்.பல்கலைக்கழகம் அழைப்பு

(யாழ்ப்பாணம்) வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நாளை 4 ஆம் திகதி ஹர்த்தாலுக்கு யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி கடைகள், வர்த்தக நிலையங்களை பூட்டி போக்கு வரத்து சேவைகளை நிறுத்தி ஹர்த்தால் முன்னெடுக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அன்றைய தினத்தில் தமிழர்களுக்கான தீர்வுகளை வலியுறுத்தி யாழ்.பல் கலைக்கழகத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி பேரணி இடம்பெறவுள்ளது. (நி-33)

# உயர்தரப் பரீட்சை முடியும் வரை மின்வெட்டு இல்லை - மின்சார சபை

(கொழும்பு) உயர்தரப் பரீட்சையின் போது தடையில்லா மின்சாரம் வழங்குவது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தாக்கல் செய்த விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு உயர்தரப் பரீட்சை முடிவடையும் வரை மின்வெட்டு விதிக்கப்பட மாட்டாது என இலங்கை மின்சார சபை உயர் நீதிமன்றத்திற்கு உறுதியளித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலைப்பந்தாட்ட போட்டி

# கிளிநொச்சி சென் திரேசா மகளிர் கல்லூரி சம்பியன்




அமரர்.விக்கினேஸ்வர மூர்த்தி ஞாபகார்த்தமாக கிளிநொச்சி வலைப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் நடத்தப்பட்ட 16 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான வலைப்பந்தாட்ட தொடரில் கிளிநொச்சி சென் திரேசா மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.


இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் கிளிநொச்சி சென் திரேசா மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி கனிஸ்ட மகா வித்தியாலய அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கிளிநொச்சி சென் திரேசா மகளிர் கல்லூரி அணி 8:3 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

கிளிநொச்சி மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத் தலைவர் திருமதி. பிலிப் அமலராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஆர். மோகனதாஸ், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.அனுரா காந்தன் மற்றும் திருமதி வி.தனபாக்கியம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.(4-6-90)

# நியூஸிலாந்தை வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா



நியூஸிலாந்து கிரிக்கெட் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான இருபது-20 போட்டியில், இந்திய கிரிக்கெட் அணி 168 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை 2-1 என்ற கணக்கில் இந்திய கிரிக்கெட் அணி கைப்பற்றியது.

அஹமதாபாத் மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 234 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.


இதில் அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, சுப்மான் கில் 126 ஓட்டங்களையும் திரிபத்தி 44 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து 235 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து அணி, 12.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 66 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், இந்திய கிரிக்கெட் அணி 168 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.


இப்போட்டியின் ஆட்ட நாயகனாக .சுப்மான் கில் தெரிவு செய்யப்பட்டதோடு தொடரின் நாயகனாக ஹர்திக் பாண்ட்யா தெரிவு செய்யப்பட்டார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2758

நதியா




அஜந்தா




நிதேஷ்




கைலாஷ்




கபிலா




யுவதேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனித பாவனைக்கு தகுதியற்ற எண்ணெய் விற்பனை

## சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

மனித பாவனைக்கு தகுதியற்ற மற்றும் காலாவதியான சமையல் எண்ணெய் வகைகளை சுங்கத்துறை அதிகாரிகளின் உதவியுடன் நாடு முழுவதும் விற்பனை செய்யப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட கனோலா சமையல் எண்ணெய் என்ற போர்வையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 51,600 லீற்றர் பாவனைக்கு உதவாத எண்ணெய் சிக்கியது.

ரிதிகம பிராந்திய மருத்துவ அதிகாரி அலுவலகத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ரிதிகம, பனகமுவ, அனுராதபுர பகுதியில் அமைந்துள்ள தேங்காய் எண்ணெய் களஞ்சியசாலையைச் சுற்றிவளைத்து சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்போது, எண்ணெய்க் கிடங்கில் தலா பத்து லீற்றர் கொண்ட 5,160 கான்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

எண்ணெய் களஞ்சியசாலைக்கு சீல் வைத்து மாதிரிகளை பரிசோதனைக்கு அனுப்பிவைக்குமாறு ரம்பதகல்ல நீதி மன்றம் பணிப்புரை விடுத்துள்ளது. (நி)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு முத்திரை, நாணயம் வெளியீடு

(கொழும்பு)

75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை தபால் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள நினைவு முத்திரை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள விசேட நினைவு நாணயம் என்பவற்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று கண்டி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

நினைவு முத்திரையை வெகுசன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவும் நினைவு நாணயத்தை



மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தனர். (நி)

# ஜப்பானிய அமைச்சர் இலங்கை வருகை

(கொழும்பு)

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் டக்கி ஷூன்சுகே நேற்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்பதற்காகவே அவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவரை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க வரவேற்றுள்ளார். (நி)

# 25,000 மெ.தொன் யூரியாவை கொள்வனவு செய்ய திட்டம்

(கொழும்பு)

சிறுபோக நெற்செய்கை மற்றும் சோளப் பயிர்ச்செய்கைக்கு தேவையான யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன் அதற்கென 10 பில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

தற்போது இலங்கை உர நிறுவனம் மற்றும் கொமர்ஷல் உர நிறுவனம் ஆகியவற்றுக்குச் சொந்தமான களஞ்சியசாலைகளில் 30,000 மெற்றிக் தொன் யூரியா உரம் காணப்படுகிறது. அதற்கு மேலதிகமாக மேலும் 25,000 மெற்றிக் தொன் உரத்தை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)


# துயர் பகிர்கின்றோம்

எமது ஆசிரியை

**திருமதி.ஜெனிற்றா சிறிகாந்தன்**

அவர்களின் தந்தை

**திரு.இளையகுட்டி சண்முகலிங்கம்**

அவர்கள் மறைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம்.

அவரது மறைவினால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

(சி-5667)



பிறப்பு-1946.08.27

இறப்பு-2023.01.31

கல்லூரிச் சமூகம், மகாஜனக் கல்லூரி.




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் மல்வத்து, அஸ்கிரி மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

# இராசிபலன்

03.02.2023
தை 20, வெள்ளிக்கிழமை
திரியோதசி முன்னிரவு 8.29 மணிவரை

திருவாதிரை காலை 8.01 மணிவரை
சுபநேரம் 6.35-8.05 மணிவரை
இராகுகாலம் 11.05-12.35 மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்- மூலம்

**வளவன்**

**மேஷம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும்.

**கடகம்**: குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**துலாம்**: தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**மகரம்**: உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், ஆரோக்கியமான நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்**: நிதி நிலை உயரும் வாய்ப்புண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்**: செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்**: சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காண வேண்டிய நாள், வழிபாடு மகத்துவம் தரும், வரவும் செலவும் சமமாகும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கும்பம்**: வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்**: இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், குடும்பத்தில் செலவுகளில் சிக்கனம் காட்டமுற்படுவீர்கள், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**கன்னி**: அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**தனுசு**: குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்**: எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், உடல் நலன் சீராகும், தொலை தூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

காரியத்தில் உறுதியாய் இருப்பதே வெற்றியின் ரகசியம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாட்டி வதைக்கும் மழை

## தீர்வுக்காக ஏங்கும் விவசாயிகள்

(யாழ்ப்பாணம்)

**தொடர்ச்சியாக பெய்து வந்த மழை காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் அறுவடை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே தமக்குரிய தீர்வை அதிகாரிகள் பெற்றுத்தர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

தற்போது பெய்யும் மழை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கால போக நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

நெல் அறுவடை தொடங்கிய நிலையில் கடந்த மூன்று நாட்களுக்கு மேலாக பரவலாக பெய்து வரும் மழை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதுடன் அறுவடை செய்யப்பட்ட நெல்லினை வீதியில் கூட உலர வைக்கமுடியாத நிலைமை காணப்படுகின்றது.

இரு மாவட்டங்களிலும் போதியளவு நெல் உலர விடும் தளங்கள் இல்லாததன் காரணமாக வீதிகளில் நெல்லினை உலர விடுவது விவசாயிகளின் வழமையானது. ஆனால் உலர விட்ட நெல் கூட மழையினால் நனைந்த நிலையில் விவசாயிகள் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.



பெருமளவு நிதி உரத்திற்கும் மருந்துகளுக்கும் செலவு செய்து இவ்வாண்டு கால போகத்தில் ஈடுபட்ட விவசாயிகள் அறுவடையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நிலையில் மழை பெய்து கொண்டிருப்பது பெரும் பாதிப்புகளை உருவாக்கி உள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் வடமராட்சி, கரவெட்டி, கப்பூது, கரணவாய், கரணவாய் மேற்கு, உடுப்பிட்டி பகுதியில் அறுவடை செய்த நெற்கதிர்கள் மழை நீரில் மிதக்கின்றது.

கரவெட்டி பகுதியில் உள்ள விவசாயத் திணைக்களம் விவசாயிகளுடைய வயல்களைப் பார்வையிட்டு அவர்களுக்குரிய நட்டத்தை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்கின்றனர். (4-6-60-315-350)

# கூரை சீரில்லாததால் பழங்கள் மழை நீரில் நனைந்து சேதம்

## பழ வியாபாரிகள் கவலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் பொதுச்சந்தையில் உள்ள பழக் கடைகளின் மேல் கூரை வழியாக மழை நீர் உட்புகுவதனால் பழ வியாபாரிகள் பெரிதும் நட்டமடைவதாக தெரிவித்துள்ளனர்.

பழ கடைகளின் மேல் கூரைகளை சரி செய்து தருமாறு சாவகச்சேரி நகர சபையினரை பல தடவைகள் கோரிய போதிலும் இதுவரை அது தொடர்பாக கவனம் செலுத்தாத நிலையில் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு பெய்த மழை காரணமாக சந்தையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த பழ வகைகள் மழை நீரில் நனைந்து சேதமடைந்திருப்பதாக பழ வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (4-6-30)

# கஞ்சாவுடன் கைதான மூவரும் விளக்கமறியலில்

(அராலி)

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து 49 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்கள் மூவரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் ஜெ.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலமாக போதைவஸ்துகள் அதிகரித்துள்ள நிலையில் அதன் மூலம் ஏற்படும் வன்முறை சம்பவங்களும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-104)

# பூமரக்கன்று நாட்டல்

(யாழ்ப்பாணம்)

கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோவில் தேரோடும் வீதியில் பூமரக்கன்று நாட்டும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 5 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. (4-6)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் தலைக்குரிசில் விருதுத்தெரிவு, இளங்கலைஞர் விருதுத் தெரிவு, சிறந்த நூற்பரிசுத் தெரிவு, நூற் கொள்வனவு ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விருதுக்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு 31.03. 2023 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு 021 205 4105 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும். அல்லது விண்ணப்பப்படிவங்களை www.np.gov.lk / www.edumin.np.gov.lk என்னும் இணையத்தளங்களின் மூலமாகவும் பெற்றுக் கொள்ள முடியும் என பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா அறிவித்துள்ளார். (4-6)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கலாசார அதிகார சபையால் 2023 ஆம் ஆண்டிற்கான கலைக்கலசம் மற்றும் கலைத் தளிர் விருதுகளுக்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் கலைஞர்கள் தங்களது விண்ணப்பப்படிவத் தினை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார கிளையில் பெற்று எதிர்வரும் 2023.02.17 ஆம் திகதிக்கு முன்பதாக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு அல்லது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் ஆ.சிறி அறிவித்துள்ளார். (4-6)

# கடும் மழை பெய்த வேளை கைவரிசை காட்டிய திருடர்கள்

## பெருமளவு பணம், நகை திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆதார மருத்துவமனையயை அண்மித்த பகுதியில் உள்ள ஆலயம் மற்றும் வாகனம் திருத்தும் நிலையம் ஆகியவற்றை உடைத்து நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு பல இலட்சம் ரூபாய் பணம் மற்றும் நகை ஆகியன திருடப்பட்டுள்ளன. கடும் மழைப் பொழிவு இருந்த வேளையில் குறித்த திருட்டு இடம்பெற்றிருப்பதாக தெரியவருகிறது.

இதன்போது சாவகச்சேரி மருத்துவமனைக்கு அருகில் உள்ள காளி கோவிலில் ஒன்றரைப் பவுண் நகைகள், 35 ஆயிரம் ரூபாய் பணம், அரிசி மூடைகள், கற்பூரப் பெட்டிகள் மற்றும் உண்டியல் பணம் ஆகியன திருடப்பட்டிருப்பதுடன் ஆலயத்திற்கு பக்கத்து காணியில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த நான்கரை இலட்சம் ரூபாய் பணத்தையும் கொள்ளையிட்டு சென்றிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது. வாகன திருத்து மிடத்தில் அதன் உரிமையாளர் உறங்கிக் கொண்டிருந்த சமயத்திலேயே குறித்த திருட்டு நூதனமான முறையில் இடம் பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. முறைப்பாட்டின் அடிப்படையில் தடவியல் பொலிஸார் மற்றும் சாவகச்சேரிப் பொலிஸார் ஆகியோர் இணைந்து திருட்டு தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# டென்மார்க்கில் உள்ள ஒருவரின் வழிநடத்தலில் கல்வியங்காட்டில் வாள்வெட்டு

## விசாரணையில் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் உள்ள கடை ஒன்றினுள் வாள்களுடன் புகுந்து அடாவடியில் ஈடுபட்டுவிட்டு 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் பொருட்களை கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மை சந்தேக நபர் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை ஒன்றின் அபிவிருத்திச் சங்க முரண்பாடு ஒன்று காரணமாக டென்மார்க்கில் உள்ள ஒருவர் பணம் அனுப்பி இந்த வன்முறையை வழி நடத்தியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரே இந்தக் கைது மற்றும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவத்துடன் 7 பேர் தொடர்புடைய நிலையில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதோடு மேலும் மூவர் தேடப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-6-33)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கூத்தாட்டு அவைக்குழாத்தினரது "விழித்தெழு" என்னும் பெயரில் அமைந்த வீதி நாடகம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இந்திய கலாசார மத்திய நிலையத்தில் ஆற்றுகை செய்யப்பட்டது. (படம்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஐ அமுல்படுத்த வேண்டாம்

## ஜனாதிபதிக்கு மகாநாயக்க தேரர்கள் கடிதம்

**(கொழும்பு) நாட்டின் சுதந்திரம் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாரிய பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டாம் என மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில்·ஜனாதிபதி வெளியிட்டுள்ள கருத்து, நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் மகாநாயக்க தேரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



13ஆவது திருத்தத்தில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மற்றும் அது தொடர்பான விடயங்கள் வழங்கப்பட்டுள்ளமை நாட்டில் பிளவுகளுக்கு மேலும் வழிவகுக்கும் எனவும் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமானது நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்தக் கூடும் என்பதை உணர்ந்து அதனை முழுமையாக அமுல்படுத்துவதறகு முன்னைய ஜனாதிபதிகள் அனைவரும் தவிர்த்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி)

## பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்

யாழ்.மாவட்ட மாட்டுவண்டி சவாரிச்சங்கத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 04.02.2023 சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் வடக்கு பேச்சி அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

எனவே அனைத்து சவாரி காளை சொந்த காரர்களையும் பழைய நிர்வாக உறுப்பினர்களையும் சவாரி பிரியர்களையும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

(14483) **செயலாளர்**


## மங்கள இசை




viber,whats app-004917620893199
தொ.இ- 077 176 8012


## கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து) கிளிநொச்சி.
## பதவி வெற்றிடம்

01. பதவி:- சாரதி 312/13
சம்பளத்திட்டம் :- 18360-160X10-170X10 = 21660

**தகைமைகள்**

அ.5 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் பேருந்து/ லொறி/பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

- வயதெல்லை 18-45 (சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கருத்திற் கொள்ளப்படமாட்டாது)
- விண்ணப்ப முடிவுத்திகதி -20.02.2023

**ஏனைய விபரங்கள்**

- ▶ இப் பதவிகளுக்குரிய அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கமைய இதர படிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- ▶ குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
- ▶ சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ▶ சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி கல்வித் தகைமை சான்றிதழ், சேவைத் தகைமை சான்றிதழ், சாரதி அனுமதிப் பத்திரம், ஏனைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை இணைத்து தலைவர், கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து) , கனகபுரம், கிளிநொச்சி, எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ 20.02.2023 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். ஏற்கனவே கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்கள் அச்சங்கத்தினூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.

(கு-5888)

**சரவணபவன் மோகனபவன்,தலைவர்.**
கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கிளிநொச்சி. 021 228 5752


## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா:32 சூரி 5செவ் 7 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/ தொழில்: BSc,MSc Engineer (சிங்கப்பூர்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி சைவ போசனம் மட்டும்<br>தொ.இ: B/10594 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: சூரி 10 செவ் 8 இல்<br>தகைமை/ தொழில்: BSc அரச நில அளவையாளர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/11976 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 3<br>கி.பா: 39 சூரி 12 செவ் 7 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: BSc DO<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/10596 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 36 சூரி 9 செவ் 7 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/ தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/11988 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 62 சூரி 2 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: O/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10600 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: சூரி 8 செவ் 6 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BA ,Final Year<br>எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/11998 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: சூரி.செவ் 8 இல்<br>உயரம்:175 cm<br>தகைமை/தொழில்:B.Tech HND in QS Quantity surveyor<br>எதிர்பார்ப்பு:அரச. தனியர் தொழில்<br>தொ.இ: B/10615 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா:35 ¼ சூரி 5 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc Civil Engineer<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/12008 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 93





"சேனை தலையாக்கிச் செங் குருதி நீர்தேக்கி ஆனை மிதித்த அருஞ்சேற்றில்" மானபரன்

பாவேந்தர் தம்வேந்தன் வாணன் பறித்து

நட்டான் மூவேந்தர் தங்கள் முடி!"

இப்படியெல்லாம் போர்க்களத்தில் கொடூரமான காரியங்களை நம் முன்னோர்களும் செய்திருக்கிறார்கள். போர்க்களத்தில் தோற்றவர்களின் கதி எப்போதும் அதோகதிதான். இராமரைப் போலவும் தர்ம புத்திரரைப் போலவும் எல்லா அரசர்களும் கருணை வள்ளல்களாக இருந்து விட முடியுமா? அப்படி அவர்கள் இருந்த படியினால்தான் காட்டுக்குப் போய்த் திண்டாடினார்கள். வீர புருஷர்களாயிருந்தும் வீரர்களின் துணையிருந்தும் வெகுவாகக் கஷ்டப்படடார்கள்.

இராஜரீகத்தில் கருணை என்பதே கூடாது. பார்க்கப் போனால் சோழ குலத்தவர்கள் சிறிது கருணையுள்ளவர்கள் என்றே சொல்ல வேண்டும். எதிரிகளையும் முடியுமானால் நண்பர்களாக்கிக் கொள்ளவே பார்க்கிறார்கள். அதற்காகக் குலம் விட்டுக் குலம் கலியாண சம்பந்தமும் செய்து கொள்கிறார்கள்.

சுந்தர சோழரின் தந்தை அரிஞ்சய சோழர் வைதும்பராயன் மகளைத் திருமணம் செய்து கொள்ளவில்லையா? அழகுக்குப் பெயர் போன அந்தக் கலியாணியின் மகனாயிருப்பதினால்தானே சுந்தர சோழரும் அவருடைய மக்களும் கூட சௌந்தரியத்தில் சிறந்து விளங்குகிறார்கள்? "ஆ! அழகி என்றதும் அந்தக் குடந்தை நகரத்து மங்கை" அரிசிலாற்றங்கரைப் பெண்மணியின் நினைவு வருகிறது.

நினைவு புதிதாக எங்கிருந்தோ வந்துவிடவில்லை. அவனுடைய உள்ளத்துக்குள்ளேயே கனிந்து கொண்டிருந்த நினைவுகள்.

வந்தியத்தேவனுடைய வெளிமனம் சோழ நாட்டின் இயற்கை வளங்களைப் பற்றியும் இராஜரீகக் குழப்பங்களைப் பற்றியும் எண்ணிக் கொண்டிருக்கையில் அவனுடைய உள்மனம் அந்த மங்கையினிடத்திலேயே ஈடுபட்டிருந்தது. இப்போது உள்மனம் வெளிமனம் இரண்டும் ஒத்து அம்மங்கையைக் குறித்துப் பட்டவர்த்தனமாகச் சிந்திக்கத் தொடங்கின.

பிறகு, வெளியில் எந்த அழகான இயற்கைப் பொருளைப் பார்த்தாலும் அந்த மங்கையின் அவயங்களுடன் ஒப்பிடத் தோன்றின. வழுவழுப்பான மூங்கிலை பார்த்ததும் அவளுடைய தோள்கள் நினைவு வந்தன. ஓடைகளில் மண்டிக் கிடந்த குவளை மலர்கள் அவளுடைய கண்களுக்கு உவமையாயின.

பங்கஜ மலர்கள் அவளுடைய தங்க முகத்துக்கு இணைதானா என்ற ஐயம் தோன்றியது. நதியோர மரங்களில் குலுங்கிக் கொண்டிருந்த மலர்களில் வண்டுகள் செய்த ரீங்காரத்தை அவள் குரலின் ஒலிக்கு உவமை சொல்வது சரியாகுமா? இப்படியெல்லாம் கவிகள் கற்பித்திருக்கிறார்களே தவிர, உண்மையில் இவையெல்லாம் எங்கே? அந்த மங்கையின் சௌந்தரியம் எங்கே? அவளுடைய திருமுகத்தைப் பார்த்தபோது மெய்சிலிர்த்ததே! இப்போது நினைத்துப் பார்க்கும்போது கூட நெஞ்சு விம்முகிறதே! இந்தப் பூக்களையும் வண்டுகளையும் பார்த்தால் அத்தகைய மெய்சிலிர்ப்பு உண்டாகவில்லையே?.. சேச்சே! முதியோர்கள் நமக்குச் செய்த உபதேசத்தையெல்லாம் மறந்து விட்டோம். பெண்களின் மோகத்தைப் போல் உலக வாழ்க்கையில் பொல்லாத மாயை வேறொன்றுமில்லை.

வாழ்க்கையில் வெற்றி பெற விரும்புவோன் பெண்களின் மோக வலையில் விழவே கூடாது. விழுந்தால் அவன் ஒழிந்தான். கோவலன் கதைதான் அந்த விடயத்தை அபூர்வமாய் எடுத்துச் சொல்கிறதே. கோவலன் மட்டும் என்ன? இந்த நாளில் வீராதி வீரரும் சோழ நாட்டிலே இணையற்ற செல்வாக்கு உள்ளவருமான பெரியபழுவேட்டரையரைப் பற்றி மக்கள் பரிகாசம் பேசுங்காரணமும் அதுதானே? ஆனால் மக்கள் உண்மை அறியாதவர்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்

### குதிரைக்கு தோஷம்

(நேற்றைய தொடர்ச்சி)

வெயில் சற்றுத் தணிந்ததும் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்தக் குதிரையின் மேல் குரு ஏறி அமர்ந்தார். வழக்கம் போல் சிஷ்யர்கள் குதிரையை நடத்தித் தாங்களும் நடந்து சென்றார்கள்.

அன்று இரவு நெருங்கும் போது ஒரு பட்டிக்காட்டை அடைந்தார்கள். அன்றைய இரவை இங்கேயே கழிக்க அந்தப் பட்டிக்காட்டில் தங்கினார்கள்.

அன்றிரவு அந்தக் குதிரையைக் கட்டிப் போட்டு வைக்காமல் மேயவிட்டார்கள். காலையில் தேடிய போது அதைக் காணவில்லை.

மூடன் வீடு வீடாகச் சென்று தேடிப் பார்த்தான். கடைசியில் ஒருவன் அதைக் தன் பட்டியில் அடைத்து வைத்திருப்பதைக் கண்டுபிடித்தான்.

அதை வெளியே விடும்படி கேட்டான் மூடன். அந்த வீட்டுக் காரன் மறுத்தான்.

"அது எங்கள் குதிரை ஐயா!" என்றான் மூடன்.

"ஆனால் இது எங்கள் பயிரை மேய்ந்து விட்டது. இரவு முழுவதும் மேய்ந்திருக்கிறது. முப்பது நாழிகை நேரமும் பயிரை மேய்ந்தும் மிதித்தும் நாசமாக்கியிருக்கிறது. அதனால் தான் இதைவிடப் போவதில்லை" என்றான் அந்த மனிதன்.

மூடன் ஓடோடிப் போய் குருவிடமும் நண்பர்களிடமும் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு கூறினான். அவர்கள் வேகமாக வந்து பாவமாகக் கெஞ்சினார்கள். அவன் ஒரேயடியாக விட முடியாது என்று மறுத்து விட்டான்.

அடுத்த ஊர் நாட்டாண்மைக்காரர் சொன்னால் அவன் கேட்பான் என்று கேள்விப் பட்டு அவரைத் தேடி ஓடினார்கள். அவருக்கும் இரக்கப்பட்டு வந்து, அவனிடம் குதிரையை விட்டு விடு என்று சொன்னார்.



"அது எப்படி விட்டு விடுவேன்! என் பயிர் எவ்வளவு நாசமாகி விட்டது? அதற்கு நஷ்ட ஈடு கொடுத்தால்தான் குதிரையை விடுவேன்" என்று பிடிவாதம் பிடித்தான் அவன்.

"எவ்வளவு சேதம்?" என்று கேட்டார்கள். "நாலு பேரை அனுப்பி மதிப்பீடு செய்யுங்கள்" என்றான் அவன்.

நான்கு பேர் சென்று குதிரை மேய்ந்த நிலத்தைப் பார்த்து மதிப்பிட்டார்கள். குதிரை மிதித்ததால் ஆன சேதம், மேய்ந்ததால் ஆன சேதம் என்று தனித்தனியாக மதிப்பிட்டு, மொத்தமாக பத்துப் பணத்தைச் சேதம்... இருந்தாலும் எட்டுப் பணம் தந்தாலும் போதும் என்றார்கள். பரமார்த்த குருவுக்கும் சிஷ்யர்களுக்கும் வயிறு பற்றிக் கொண்டு எரிந்தது. அவ்வளவு பணமா...? ஐயய்யோ!

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.

– சிம்மன்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விளைந்த நெல் அழிய காரணம் யாதென அறிந்தால்

கொட்டித்தீர்த்த கனமழையால், விளைந்த நெற்பயிர்கள் அழிந்து போயின.

இதனால் வேளாண் விவசாயிகள் பெரும் துன்பத்தை அனுபவித்து நிற்கின்றனர்.

அறுவடை நடந்து கொண்டிருக்கையில், கனமழை கொட்டித் தீர்த்தது.

எனினும் இது தொடர்பில் விவசாயிகள் அறிவுறுத்தப்படவில்லை என்பது ஒருபுற மிருக்க, நெல் வெட்டும் இயந்திரங்களின் உரிமையாளர்களின் பொறுப்பற்ற செயலும் தாம் பாதிக்கப்படுவதற்கு மூலகாரணம் என விவசாயிகள் வேதனையோடு பகிர்ந்து கொள்கின்றனர்.

ஆம், நெல் வெட்டும் இயந்திர உரிமை யாளர்கள், சில ஊர்களில் தனியுரிமையைப் பேணுகின்றனர்.

அதாவது தங்களைத் தவிர வேறு எவ ரும் நெல் வெட்டும் இயந்திரத்தை குறித்த ஊருக்குக் கொண்டு வருவதை மறைமுக மாகத் தடுக்கின்றனர்.

இதனால் குறித்த நேரத்தில் – தாம் நினைத்த நேரத்தில் விளைந்த நெல்லை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் அந்தரிக்க வேண்டியதாயிற்று.

உண்மை. ஒரு நெல் வெட்டும் இயந்திரம் ஒரு குறிப்பிட்ட மணித்தியாலங்களில் எத் தனை ஹெக்டேயரில் நெல்லை வெட்ட முடி யும் என்ற மதிப்பீட்டைச் செய்யாமல், தனி யொரு நெல் வெட்டும் இயந்திரம் குறித்த இடத்தில் நெல் வெட்டும் பணியைச் செய் யும்போது, அந்தப் பணி முழுமை பெறுவதற்கு பல நாட்கள் தேவைப்படுகிறது.

இதனால் விளைந்த நெல்லை அறுவடை செய்வதற்கு விவசாயிகள் நெல் வெட்டும் இயந்திரத்துக்காகத் தவம் கிடக்கின்றனர்.

முன்பெல்லாம் அருவி வெட்டி சூடடித்து நெல்லை வீட்டுக்கு எடுத்துச் செல்கின்ற நடை முறை இருந்தது.

ஆனால் நெல் வெட்டும் இயந்திரப் பயன்பாடு எப்போது நடைமுறைக்கு வந்ததோ அன்று தொடக்கம் அருவி வெட்டி சூடடிக்கும் முறைமை இல்லாது போயிற்று.

இந்த நிலையில்தான் நெல் வெட்டும் இயந்திரத்துக்காகப் பல நாட்கள் காத்திருக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

அதாவது தங்களைத் தவிர, ஏனைய நெல் வெட்டும் இயந்திரங்கள் உள்நுழை வதைத் தடுத்து, தனியுரிமையைப் பேணு கின்ற நெல் வெட்டும் இயந்திர உரிமையாளர் களின் மேற்போந்த செயலால் அருவி வெட்டு வதில் காலதாமதம் ஏற்படுகிறது.

இதனாலேயே திடீரெனப் பெய்த மழை வெள்ளத்தில், முற்றிய நெற்பயிர்கள் மூழ்கி அழியும் அவலம் நடந்தது.

எனவே இத்தகைய மறைமுகமான அநீதி குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியே னும் உரிய நடவடிக்கை எடுத்து அப்பாவி விவ சாயிகளைக் காப்பாற்ற முன்வர வேண்டும்.

# வலி. வடக்கு காணி விடுவிப்பு நிகழ்வில் கலந்துகொள்ளமாட்டேன்

## விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலி.வடக்கில் இன்று நடைபெறவுள்ள காணி விடுவிப்பு நிக ழ்வில் கலந்து கொள்ள மாட்டேன் என பாராளு மன்ற உறுப்பினரும் நீதி யரசருமான சி.வி.விக் னேஸ்வரன் எழுத்து மூலம் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் பின்வரும் காரணங்களு க்காக தான் பங்கேற்பதில் இருந்து விலகியிருக்கி றேன் எனவும் அதற்கு தனது வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இன் னும் 3000 ஏக்கர் தனி யார் காணிகள் இராணு வத்தின் பிடியில் இருப்ப தைக் கருத்தில் கொண்டு விடுவிக்கப்பட வேண்டிய நிலப்பரப்புமிகக் குறைவு. வடமாகாணத்தில் 6000 ஏக்கர் அரச காணிகள் படையினரால் ஆக் கிரமிக்கப்பட்டுள்ளன.

அத்தகைய ஏக்கரில் இருந்து எதுவும் விடு விக்கப்படவில்லை. ஓடு பாதை அமைப்பதற்கு இனி நிலம் எதுவும் வேண்டாம் என்று இந்திய அரசு எனக்கு முன்பே தெரிவித்திரு ந்தது.

அப்படியானால், பலாலி விமான நிலையப் பகுதியில் இராணுவம் தொடர்வது விமான நிலையத்தின் பாதுகாப்பு நோக்கங்களுக்காக மட் டுமே இருக்கும். விமான நிலையத்தின் பாதுகாப்பு நோக்கங்களுக்காக தேவைப்படும் நிலத்தை விட அதிகமான நில த்தை அவர்கள் தடுத்து வைத்துள்ளமை ஏன்?

இவ்வளவு ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட வேண்டியிருக்கும்போது, இது ஒரு கண்துடைப் பாகத் தெரிகிறது.

இருந்தபோதிலும் மிகக் குறைந்த காணி களை மிகவும் தாமதமாக என்றாலும் விடுவித் ததை நான் வரவேற் கிறேன். குடாநாட்டில் மக்களின் மீதிக் காணி களை வழங்க நடவடி க்கை எடுக்கப்பட்டால் என்னால் இயன்ற வகை யில் உதவுவேன்.

இதுபோன்ற விழா வில் நான் தவறாமல் பங்கேற்பேன் என்று எதிர்பார்க்கலாம்.

எனவே,ஒரு எதிர்ப் பாக பெப்ரவரி 3ஆம் திகதி நடைபெறும் விழா வில் பங்கேற்பதைத் தவிர்க்க விரும்புகிறேன் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# இலங்கைக்கு நிதி உத்தரவாதம் வழங்க பாரிஸ் கிளப் தயார்

## ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியீடு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (IMF) 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் விரிவாக்கப்பட்ட நிதி வசதியை பெறுவ தற்கு தேவையான கடன் மறுசீரமைப்பு உத் தரவாதங்களை இலங் கைக்கு வழங்க பாரிஸ் கிளப் (Paris Club) தயா ராகவுள்ளது.

பெரும் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கை க்கு, கடன் மறுசீரமை ப்பில் "விரைவில்" தமது ஆதரவை பாரிஸ் கிளப் அறிவிக்க உள்ளதாக விடயத்துடன் தொடர்பு டைய ஒருவர் தெரிவித் ததாக ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரி வித்துள்ளது.

நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத் திவரும் இலங்கை, கடந்த செப்டம்பரில் பணி யாளர் மட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. எனி னும் இந்த நிதி திட் டத்தை பெறுவதற்கு சர்வதேச நாணய நிதி யத்தின் நிறைவேற்று குழுவின் ஒப்புதல் பெறு வது அவசியம்.

அந்த ஒப்புதலை பெற, முக்கிய இருதரப்பு கடன் வழங்கு பவர்களிட மிருந்து நிதி உத்தர வாதத்தை பெற வேண் டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. பாரிஸ் கிளப்பின் உறுப் பினர் அல்லாத சீனாவும் இந்தியாவும், இலங் கைக்கான இருதரப்பு கடன் வழங்குநர்களில் முன்னணியில் உள்ள னர்.

எவ்வாறாயினும், அண்டை நாடான இல ங்கையின் கடன் சுமையை குறைக்க உத வுவதற்கு முன்வந்த இந்தியா, அதற்கான நிதியியல் உத்தரவாத ங்களை அளித்தது. மேலும் சீனாவின் எக் ஸிம் வங்கி கடந்த ஜன வரி மாதம் இலங்கைக்கு அனுப்பிய கடிதத்தில், இரண்டு வருட கடன் ரத்து கால அவகாசத்தை வழங்கியது.

சீனாவின் இந்த உறுதிமொழிகள் தொட ர்பாக சர்வதேச நாணய நிதியம் இதுவரை எந்த நிலைப்பாட்டையும் அறிவிக்கவில்லை.

எவ்வாறாயினும், சீனா போதுமானதைச் செய்யவில்லை என்று கொழும்புக்கு விஜயம் செய்த அமெரிக்க அர சியல் விவகாரங்களுக் கான துணை செயலாளர் விக்டோரியா நுலாண்ட் செய்தியாளர்களிடம் கூறினார்.

சீனா இதுவரை வழ ங்கிய உத்தரவாதம் போதாது. அவர்களிடம் IMF கடன் நிவாரண த்தை பெற நம்பகமான மற்றும் குறிப்பிட்ட உத் தரவாதங்களை நாம் எதிர்பார்க்க வேண்டும் என்று அவர் தெரிவித் திருந்தார்.

அமெரிக்கா, சர்வதேச நாணய நிதியத்தின் மிகப்பெரிய அங்கத்த வர்களின் ஒருவராக உள்ளமை குறிப்பிடத்த க்கது. (ம-7)

# சிறையில் என்னை கொலை செய்ய திட்டமிடப்பட்டது

## வசந்த முதலிகே

சிறைச்சாலையில் இருந்த தம்மை கொலை செய்ய திட்டமிடப்பட்டதாக பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்தின் ஒருங் கிணைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்து ள்ளார்.

நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவி க்கையில்,

தாம் கைது செய் யப்பட்டு பேலியகொடை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட் டதாக வசந்த முதலிகே தெரிவித்தார்.

இதனையடுத்து, அங் கிருந்து எடெரமுல்ல பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட தாகவும், இதன்போது பொலிஸ் நிலையத்தில் யாரும் இருக்கவில்லை எனவும் வசந்த முதலிகே குறிப்பிட்டார்.

விஜேவீரவுக்கு நடந் தது ஞாபகம் இருக்கிறதா என கேள்வி எழுப்பிய சில பொலிஸார், தமக்கு பல் வேறு இன்னல்களை கொடு த்ததாக தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 167 நாட் களாக சிறையில் வைக்க ப்பட்டிருந்த வசந்த முத லிகே நேற்று முன் தினம் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# ஜப்பானிய தூதுவர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஜப்பானிய வெளிவிவ கார அமைச்சர் டக்கி ஷன்சுகே நேற்று (வியா ழக்கிழமை) இலங்கை க்கு வருகை தந்தார்.

இலங்கையின் 75 வது சுதந்திர தின நிக ழ்வில் பங்கேற்பதற்கா கவே அவர் இலங்கை க்கு வருகைதந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அவரை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதி இராஜாங்க அமை ச்சர் ஷெஹான் சேம சிங்க வரவேற்றுள்ளார். (ம-7)

# கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று

விசேட கட்சித் தலை வர்கள் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு இட ம்பெற உள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள புதிய பாராளுமன்ற கூட்ட த்தொடர் குறித்து இந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரை யாடப்பட உள்ளது.

9ஆவது பாராளுமன் றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் கடந்த 27 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைந்தது.

புதிய அமர்வு பெப்ர வரி 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்ப மாகும். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சிகளுக்குள் பிளவு ஏற்படும் வகையில் செயற்பட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை

## தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை

(அராலி)

கட்சிகளுக்குள் பிளவு ஏற்படுத்தும் முகமாக செயற்பட்ட தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் எதிர்வரும் 11,12 ஆம் திகதிகளில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூடி அவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஏனைய க்ட்சிகளை விமர்சித்தல், முரண்பட்ட கருத்துக்களை பேசுதல் போன்ற செயற்பாடுகள் அண்மைய நாட்களில் அதிகரித்து வருகின்றன இந்த வகையில் தமிழரசு கட்சியின் தலைவர் என்ற ரீதியில் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சுமத்துகின்றார்கள் இன்று (நேற்று) காலையிலும் எனக்கு பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

சுமந்திரனின் அறிக்கை, தவராசாவின் அறிக்கையின் அடிப்படையிலும் மிகவும் அதிருப்தி அடைந்த மக்கள் அவர்களுடைய பிரதிநிதிகள், எமது கட்சிப் பிரதிநிதிகள் என்னிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த மாதம் 11,12 ஆம் திகதிகளில் மத்திய செயற்குழு கூட்டம் கூட்டப்பட்டு கட்சி பிளவுபடுத்தக்கூடிய வார்த்தை பிரயோகங்களை பிரயோகித்தவர்கள் பிரசார மேடைகளில் ஏனைய கட்சிகளை விமர்சித்தவர்கள் எந்த பொறுப்பில் இருந்தாலும் அவர்களுக்குரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானித்திருக்கின்றேன்.

எனவே எதிர்வரும் மத்திய செயற்குழு கூட்டத்தில் ஏனைய கட்சிகளை விமர்சித்தவர்கள் கட்சிகளை பிளவுபடுத்தக் கூடியவாறு செயற்பட்டவர்களுக்கு உரிய நடவடிக்கை நான் எடுக்க உள்ளேன். நான் எந்த பதவியில் இருந்தாலும் அவர்களுக்குரிய நடவடிக்கை எடுப்பேன் எனத் தெரிவித்தார். (4-6-104)

# இணுவில் கந்தசுவாமி கோவில் தைப்பூச மஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் தைப்பூச மஞ்சத் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 5.30 மணிக்கு பாற்குடப் பவனி இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடையும். தொடர்ந்து 9.30 மணிக்கு பொங்கல் ஆரம்பமாகி 2.30 மணிக்கு நிறைவடையும்.

மாலை 5.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து 6 மணிக்கு நூற்றாண்டுகள் பழைமைவாய்ந்த உலகப் பெரு மஞ்சத்தில் முருகப் பெருமான் வீதி வலம் வந்து அருட்காட்சி அளிப்பார். (4)

# தொடர் மணல் அகழ்வால் பிரதான வீதிகள் சேதம்

## பழைய முறிகண்டி மக்கள் விசனம்



(அக்கராயன்)

தொடரும் மணல் அகழ்வினால் தமது கிராமத்தின் முதன்மை வீதி சேதமடைந்து உள்ளதாக முல்லைத்தீவு பழைய முறிகண்டி கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

2010 ஆம் ஆண்டில் இருந்து தமது கிராமத்தில் இருந்து மணல் வெளி இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் ஆகியோருக்கு பல தடவைகள் முறைப்பாடுகள் செய்தும் கிராமத்தின் மணல் அகழ்வு தடுத்து நிறுத்தப்படவில்லை.

40 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற கிராமத்தில் ஆற்றுப்படுகைகளில் தொடர்கின்ற மணல் அகழ்வினால் குளத்தின் அணைக்கட்டிற்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் மணலுடன் செல்லும் டிப்பர்களினால் கிராமத்தின் முதன்மை வீதி கடுமையாக சேதமடைந்து இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (4-6-350)

# தென் பகுதி போராளிகள் தமிழர்களின் கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டும்

## சட்டத்தரணி ஸ்ரீகாந்தா

(யாழ்ப்பாணம்)

தென் இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்ட போராடும் போராளிகள் தமிழ் மக்களின் அரசியல் நீதி கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டும் என தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்,

பாரிய பொருளாதார நெருக்கடி நிலையின் மத்தியிலும் இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை கோலாகலமாக கொண்டாடுவதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் முடிவெடுத்து நிற்கின்ற சூழ்நிலையிலே சுதந்திர தின கொண்டாட்டத்தை புறக்கணிக்கப் போவதாகவும் மனித உரிமை மீறல்கள் இந்த அரசாங்கத்தில் தொடர்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் இன்று மாலையில் இருந்து போராட்டம் நடத்தப் போவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி மத்தியில் இவ்வாறான ஒரு கொண்டாட்டம் தேவைதானா அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையிலே இதில் கலந்து கொள்ள முடியுமா? என்ற கேள்விகளை எல்லாம் எழுப்பி கத்தோலிக்க திருச்சபை இதனை புறக்கணிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றது.

பல்வேறு சிவில் அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் என்பன எதிர்வரும் 75 ஆவது சுதந்திர தினத்தை துக்க நாளாக கரி நாளாக பிரகடனப்படுத்தியிருக்கின்றார்க்ள்.

பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து மட்டக்களப்பிலே முடிவடையும் விதத்திலே ஒரு பாரிய பேரணிக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார்கள். இந்த அழைப்பிற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முழுமையான ஆதரவினை வெளியிட்டு இருக்கின்ற சூழ்நிலையில் சில கருத்துக்களை பொது வெளியில் முன்வைப்பது பொருத்தமானது என்று கருதுகின்றோம்.

தமிழ் மக்கள் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிப்பது இதுமுதல் தடவையல்ல. தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற அரசியல் நீதி தொடர்பில் ஒரு திட்டவட்டமான நிலைப்பாட்டிற்கு தென் இலங்கையிலே ஜனநாயகத்தின் பெயரில் குரல் எழுப்புகின்ற போராடுகின்ற அனைத்து முற்போக்கு சக்திகளும் வர வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற முறையிலே இந்த நாட்டிலே ஆட்சி அமைப்பு முறையை மாற்றி அமைப்பதற்கு சிங்கள முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து ஆதரவளிக்க வேண்டும் என தெரிவித்தார். (4-6-33)

# கால்நடைகளின் உறைவிடமாக ஐயன்கன்குளம் பொதுச்சந்தை



(அக்கராயன்)

முல்லைத்தீவு ஐயன்கன்குளம் பொதுச் சந்தை இயங்காத நிலையில் காணப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்ட இச்சந்தை இதுவரை இயங்காததன் காரணமாக கட்டடம் கால்நடைகளின் உறைவிடமாகக் காணப்படுகின்றது.

210 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற ஐயன்கன்குளத்தில் துணுக்காய் பிரதேச சபையினால் சந்தைக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டில் அப்போதைய அமைச்சராக இருந்த றிசாத் பதியுதீனால் திறந்து வைக்கப்பட்டது.

இதேபோன்றே கோட்டைகட்டியகுளம் கிராமத்தில் சந்தைக்காக அமைக்கப்பட்ட கட்டடம் நீண்ட காலமாக திறக்கப்படாமல் உள்ளது. பிரதேச சபை கட்டடங்களைக் கட்டுவதில் அக்கறை செலுத்துகின்றதே தவிர அதனை மக்கள் பயன்பாட்டிற்காக மாற்றுவதற்கான எந்தவிதமான திட்டங்களும் நடைமுறைப்படுத்துவதில்லை என பொது அமைப்புகளினால் தெரிவிக்கப்படுகின்றது. (4-6-350)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 120 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 250 | 300 |
| தக்காளி | 250 | 280 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 250 |
| கோவா | 80 | 70 | 90 | 100 |
| கரட் | 120 | 160 | 200 | 200 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 |
| புடோல் | 200 | 170 | 150 | 120 |
| வாழைக்காய் | 160 | 180 | 150 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 600 | 600 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 180 |
| பாகற்காய் | 250 | 400 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 250 | 350 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 90 | 90 | 150 |
| பயற்றங்காய் | 300 | 400 | 300 | 350 |
| லீக்ஸ் | 320 | 80 | 300 | 300 |
| பீற்றூட் | 160 | 150 | 200 | 200 |
| கறிமிளகாய் | 600 | 650 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1800 | 1700 | 1300 | 1400 |
| போஞ்சி | 250 | 250 | 280 | 400 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 150 | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 70 | 50 | 50 |
| தேசிக்காய் | 60 | 70 | 50 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 350 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 160 | 280 | 300 |
| முள்ளங்கி | 100 | 60 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 160 | 140 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 118.5 மி.மீற்றர்...

என்.சூரியராஜ் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கிடைத்துவரும் மழை நாளை வரை தொடரும்.

மேலும் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் தற்போது காற்றின் வேகம் மணிக்கு 35 கி.மீ வேகத்தில் வீசுகின்றது. இந்த ஆழ்ந்த காற்ற முத்த தாழ்வு மண்டலம் கரையைக் கடக்கும்போது காற்றின் வேகம் மேலும் அதிகரிக்கலாம் என்றார். (ம-7,33)

## எரிவாயு விலை...

விலைத் திருத்தம் இடம்பெறும் என நிறுவனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எரிவாயு விலை சூத்திரத்தின் பிரகாரம் 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலையை 700 முதல் 800 ரூபாய் வரை அதிகரிக்க வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும், லிட்ரோ நிறுவனம் இதன் விலையை 350 ரூபாயினால் மட்டுமே அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## சுமார் 109...

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

75ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் இந்தக் காணிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழிக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## 13வது திருத்...

கண்டிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

இதன்போதே மல்வத்து பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர், அமரபுர பீடத்தின் மகாநாயக்கர் தொடம்பான ஸ்ரீ சந்திரசிறி தேரர் மற்றும் ராமாஞ்ஞ பீடத்தின் மகாநாயக்கர் மல்குலாவே ஸ்ரீ விமல தேரர் ஆகியோரால் கையெழுத்திடப்பட்ட கடிதம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நிறைவேற்றதிகாரி என்ற ரீதியில் நீங்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ள கருத்து நாட்டுக்குள் பெரும் பதற்றமான சூழல் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள், மரபு ரீதியானதும் வரலாற்று சிறப்புமிக்கதுமான ஸ்தலங்கள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் மத ரீதியான அமைப்புக்களை ஒழுங்குபடுத்தல் உள்ளிட்ட அதிகாரங்களை செயற்படுத்த மாகாண சபைகளுக்கு வாய்ப்பளிக்கப்படுகின்றமையானது நாட்டில் பிரிவினைவாதம் செயற்பட வழிவகுக்கும்.

இதற்கு முன்னர் பதவி வகித்த நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளால் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை முழுமையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கா மைக்கான காரணம் நாட்டுக்குள் பதற்றமான நிலைமை உருவாகி விடக்கூடாது என்பதனாலாகும் என் பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

எவ்வாறிருப்பினும் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதன் ஊடாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளிட்டவற்றை மாகாண சபைகளுக்கு வழங்குவதானது அரச நிர்வாகத்தை சீர்குலைப்பதாகவே அமையும்.

இதன்மூலம் நாட்டின் ஸ்திரத்தன்மை, இறையாண்மை மற்றும் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

எனவே 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடைமுறைப்படுத்தக் கூடாது என்பதை மகா சங்கத்தினர் என்ற ரீதியில் வலியுறுத்துகின்றோம்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## செலவைக் குறை...

யிடமிருந்து கோரப்பட்டுள்ள நிதி கிடைக்காமல் போகும் பட்சத்தில், அது பிரச்சினையை ஏற்படுத்தும் என அவர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில், குறித்த தொகையை வரவு செலவுத் திட்டத்தினூடாக விடுவிப்பதற்கு சமீபத்தில் பாராளுமன்றம் அனுமதி வழங்கியது.

2023ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள மீண்டெழும் செலவுகளை 6 வீதத்தால் குறைத்தல், அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பில் நிதி பொருளாதார ஸ்திரத்தன்மை, தேசிய கொள்கைகள் அமைச்சினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஜனாதிபதியாக...

தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பொருளாதாரப்...

ஒரு நாட்டின் அரசியல் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டின் ஸ்திரத்தன்மையே பொருளாதாரப் போரில் வெற்றி பெறுவதற்கான சிறந்த காரணியாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முப்படைகளின் 77 சிரேஷ்ட அதிகாரிகளுக்கு சிறந்த சேவைக்கான விபூஷண விருதுகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதப் போருக்கும் பொருளாதாரப் போருக்கும் இடையில் ஒரே ஒரு வித்தியாசம் தான் இருக்கின்றது. அன்று உயிர்கள் பறிபோயின. இன்று வருமானம் இழந்துள்ளது. அதுதான் வித்தியாசம். இழந்த உயிர்களை மீண்டும் வழங்க முடியாது. ஆனால் இழந்த வருமானத்தை மீட்டெடுக்க முடியும். அரசாங்கம் என்ற ரீதியில் நாம் அனைவரும் அந்த வேலைத்திட்டத்தில் உறுதியாக இருக்கின்றோம்.

அப்போது நாம் பெற்ற அரசியல் சுதந்திரம் மற்றும் நாங்கள் பாதுகாத்த பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றுடன் பொருளாதார சுதந்திரத்துடன் முன்னேற முடியும் என்று நான் நம்புகிறேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

## நாட்டைக்...

யில் செயற்படுகிறோம்.

அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக இருக்க செயற்படுவோம். பழைமைவாத அரசியலை இல்லாமல் செய்து புதிய அரசியல் பயணத்துடன் பயணிக்க திசைகாட்டியுடன் பயணியுங்கள் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை சீரழித்த திருடர்களை வீட்டுக்கு அனுப்ப திசைகாட்டியால் மாத்திரமே முடியும் தெற்கு, மேற்கு, கிழக்கு, வடக்கு, உட்பட ஏனைய மாகாணங்களில் அனைத்து இன மக்களின் ஒத்துழைப்புடன் ஆட்சியை நடத்த எம்மால் முடியும் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக இருக்க செயற்படுவோம், பழைமைவாத அரசியலை இல்லாமல் செய்து புதிய அரசியல் பயணத்துடன் பயணிக்க திசைகாட்டியுடன் பயணியுங்கள் என்றார். (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1474
வெற்றி இலக்கங்கள்
கடகம் 5 1 3 0 3 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1049
C 16 36 40 48
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.02 சீட்டிழுப்பு இலக்கம் 3261
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Z 23 38 51 72
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1367
I 06 23 59 63 72

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.02
சீட்டிழுப்பு இலக்கம் 328
கும்பம் 08 13 18 57 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/02
சீட்டிழுப்பு இலக்கம் 5019
G 7 6 1 1 0 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1994 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.02.02 தினம் வியாழக்கிழமை
C 30 35 71 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,478,880/-
DLB

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.02
சீட்டிழுப்பு இல : 4155
வர்ணம் : சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,240,600/-
வெற்றி இலக்கங்கள் 37 47 48 65 Z
DLB

ராசி
திகதி 2023-02-02
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,385,242/-
வெற்றி வாரம் 3706
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 09 16 20 50
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,219,000/-
1103 002
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 16 34 48 56 74
சீட்டிழுப்பு வாரம் 1170
செம்மஞ்சள்
2023.02.02 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 302,870,980.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 567 திகதி 2023-02-02 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 03 07 44 விதி எண் 08
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 16,655,448/-
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1820
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.02.02
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,797,060/-
வெற்றி இலக்கங்கள் 11 41 55 56 L
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தின கொண்டாட்டம் 3100 பேருக்கு அழைப்பு

(கொழும்பு)

நாட்டின் 75 ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காக 16 நாடுகளை சேர்ந்த இராஜதந்திரிகள் நாட்டிற்கு வருகை தரவுள்ளனர்.

சுதந்திர தின விழாவிற்கு 3100 க்கும் அதிகமானவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் சுதந்திர தின கொண்டாட்டத்திற்கான செலவு 200 மில்லியன் ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


## காணி விற்பனைக்கு

இராசபாதை கோப்பாய் தெற்கில் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை
(14489)

076 870 3940



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 1945 . 08 . 26

உதிர்வு 2023 . 01 . 04

கடந்த 2023.01.04 அன்று இறைபதம் அடைந்த

### அமரர் ஞானப்பிரகாசம் ஆரோக்கியநாதன்

அவர்களின் ஆன்மா இளைப்பாற்றிற்காக புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் 2023.02.03 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

2 ஆம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

தகவல் அன்பு மனைவி
பிள்ளைகள்
077 329 4878 (மகன்)

(C-5889)



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127



## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் முருகையா நகுலேஸ்வரன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

தோற்றம் 1941.01.21

மறைவு 2022.01.15

திதி : திரயோதசி

ஓராண்டு நகர்ந்தாலும்
ஒருநொடி கூட நம்பமுடியவில்லை
நேற்றுக் கண்ட உமை நினைத்து
நெஞ்சம் தடுமாறுகின்றதே!
கண்ணீர் மலர்தூவி அஞ்சலிக்கும் இந்நாளில்
இறையோடு கலந்த உம் ஆத்மா
சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

கீரிமலை வீதி,
மாவிட்டபுரம்.

குடும்பத்தினர்
077 922 5648

(14484)



## புலமைப்பரிசில் வகுப்புக்கள்

யாழ்.நகரில்......

ஆசிரியர் என்.எஸ்.தீபன்

தரம் 04, 05

❖ IQ Classes ❖ Paper Classes

(சனி, ஞாயிறு தினங்களில்)

077 666 0749

(14482)


## பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள் (பெண்கள் - பகல் கடமை)
- அலுவலகச் செய்தியாளர்கள் (ஆண்கள் - இரவுக் கடமை)
- ஒப்புநோக்குநர் (Proof Reader) (ஆண்கள் - இரவுக் கடமை)

வயது ▶ 25 - 35 வயது

கல்வித் தகைமை ▶ க.பொ.த உயர்தரம்

குறிப்பு

யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் மட்டும். தகைமையும் விருப்பமும் உடையவர்கள் தமது சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் 05.02.2023 முற்பகல் 9.30 மணிக்கு நேரில் வரவும்.

மேலதிக தொடர்புகளுக்கு 076 097 3121

பொது முகாமையாளர்
வலம்புரி

(இ)


## தவறவிடப்பட்டது

சங்கானை மக்கள் வங்கிக்கும் Northern Hospitalக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் 01.02.2023 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கும் 6.30 மணிக்கும் இடையில் தங்க பூட்டுக்காப்பு ஒன்று தவற விடப்பட்டுள்ளது.

கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

075 217 5521

(14487)



## விற்பனையாளர் தேவை

எமது புடவை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள ஆண் / பெண் பணியாளர் தேவை. நேரில் வரவும்.

சென்னை பெசன் வேல்ட்

இல. 63, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(14488)





## அகரம்

உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

### புதிய கல்வி ஆண்டு -2023

புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

புதிய தரம் 06 தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்

05.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)

தைப்பூச நன்னாள் அன்று காலை 7.40 - 8.40

அனுமதிகளை 18.01.2023 இருந்து பெற்றுக் கொள்ளலாம்

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

(14411)



## தீபம் கல்வி நிலையம்

THEEBAM EDUCATION CENTRE

இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
(கலைக்கோட்டம் அருகில்)

### புதிய கல்வியாண்டு - 2023

தரம் 6
- தமிழ் மொழி மூலம்
- ENGLISH MEDIUM

ஆரம்பம் 05.02.2023

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவச் செல்வங்களிற்கு வாழ்த்துக்கள்

ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

அன்பான பெற்றோர்களே !

- உங்கள் பிள்ளைகளின் எதிர்காலக் கல்விக்காக தீபத்துடன் இணைந்து தரம் 06 முதல் O/L, A/L வரை கல்வியைத் தொடருங்கள்.
- அடிப்படை ஆங்கிலம், சிங்களம், ICT வகுப்புக்கள் முற்றிலும் இலவசமாக நடைபெறும்.
- ஏனைய வகுப்புகளிற்கும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளதால் அனுமதிகள் வழங்கப்படுகின்றது.

அனுமதிகளுக்கு அழையுங்கள் - 0773347781

நிர்வாகி



யாழ்.நகரின் No-1 கல்வி நிறுவனம்

## புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்

மீண்டும் புதுப்பொலிவுடன் யாழ்.நகரின் பிரபல பாடசாலை ஆசிரியர்களின் ஒழுங்கமைப்பில்

தரம் 6 புதிய கல்வியாண்டு

2023ற்கான வகுப்புக்கள்

தமிழ் மொழி மூலம், English Medium
தைப்பூச நன்நாளில் ஆரம்பம்

05.02.2023 ஞாயிறு காலை 9.00 மணி

- மாதாந்த, தவணைப் பரீட்சைகள்
- சீரான நேர அட்டவணை
- தனிப்பட்ட கவனிப்பு

அனுமதிகள் இன்று முதல் வழங்கப்படுகின்றன.

077 459 8440

(14485)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org